**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**
**KANNIYAKUMARI AT NAGERCOIL.**

09.03.2026

O.S. No. 342/2023

P.W. 2 திரு. முருகன்

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை (4 ஆம் பிரதிவாதி தரப்பில்) -**

நான் வாதி நிறுவனத்தில் எலக்டிரிக் ஆப்ரேட்டராக பணிபுரிந்து வருவதை காட்டுவதற்கு ஏதாவது ஆதாரம் உண்டா என்றால் அடையாள அட்டை இருக்கிறது. பணி நியமன உத்தரவு ஏதாவது உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தில் பிரதிவாதிகள் தங்களுக்கு அடமானம் செய்யபட்டது என்று கூறி அளக்க வந்தார்கள், அந்த சொத்து வாதிக்கு உரிமையானது என்று கூறி வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வாதி எப்போது தாவா சொத்தை விலைக்கு வாங்கினார் என்ற விவரம் தெரியுமா என்றால் 2004 ல் விலைக்கு வாங்கினார். அந்த விலையாதாரப் பத்திரத்தில் ஏதாவது சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து சம்பந்தமாக நில ஆர்ஜித உத்தரவு எதையும் பார்த்தேனா என்றால் இல்லை. அவ்வாறு நில ஆர்ஜிதம் செய்தது சம்பந்தமாக விவரம் எதுவும் தெரியுமா என்றால் தெரியும். வாதியிடம் தற்போது எவ்வளவு பாக்கியுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். அதற்கு ஏதாவது ஆவணம் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. இந்த

வழக்கிற்காக வாதிகள் சொல்லிகொடுத்தபடி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (1 மற்றும் 2 ஆம் பிரதிவாதிகள் தரப்பில்) -**

குறுக்கு விசாரணை இல்லை.